நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: **திரு.து.ஹரிராம், பிகாம்,பி.எல்.,**
நீதித்துறை நடுவர், திருவையாறு

நாள் - 23 .06.2023 CC. 131 /2010 அ.சா.1 கோபாலகிருஷ்ணன் ,
த-பெ.சீனிவாசன்

**எதிரிகள்தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி....**

எதிரிகள் புல எண்.195/2Aல் 1.53.5 ஏர்ஸ் சம்மந்தமாக எதிரி பழனிச்சாமி என்பவருக்கு சான்று வழங்கியது சம்மந்தமானதுதான் இந்த வழக்கு என்றால் சரிதான். எதிரிகள் வழங்கிய அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் முதலில் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதன் அடிப்படையில் அங்கு நடவடிக்கை எடுக்காததால்தான் 156(3) குவிமுச-ன் கீழ் புகார் கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் நீதிமன்றத்திலிருந்து புகார் சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க கோரி இடப்பட்ட உத்தரவின்பேரில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். 07.07.2008ஆம் தேதி 2ஆம் எதிரி 3ஆம் எதிரியாகிய பழனிச்சாமிக்கு தாவா நிலங்களை சாகுபடி செய்வதாக அருகில் உள்ள நிலச்சுவான்தார்கள் மற்ற முக்கிய நபர்களிடம் விசாரணை செய்து 3 ஆம் எதிரிதான் சாகுபடி செய்து வருகிறார் என்று சான்று கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

27.01.2006ஆம் தேதியிட்ட எனது தாயார் அமிர்தலெட்சுமி அம்மாள் எனக்கு தாவா இடம் சம்மந்தமாக தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்தார். அப்போது அதன் மதிப்பு ரூ.5,86,500/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணம் ஏற்கனவே அ.சா.ஆ.10-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் சம்மந்தபட்ட சொத்து சம்மந்தமாக எனது சகோதரர் சேதுராமன் என்பவர் பாகம் கேட்டு கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றநததில் அசல் வழக்கு எண். 85/2008ஐ தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். **அந்த நீதிமன்ற சான்றிட்ட நகல் எ.த.சா.ஆ.1/அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

அந்த வழக்கில் நான் ஆஜர் ஆகாததால் 06.04.2010 அன்று ஒரு தலைபட்சமாகதீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். **அந்த தீர்ப்பாணை சான்றிட்ட நகல் எ.த.சா.ஆ. 2/அ.சா.1ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.**மேற்படி வழக்கு நிலுவையில் இருந்தபோது 28.07.2011அன்று திருவையாறு செட்டி தெருவில் வசிக்கும் (லேட்,) தெட்சிணாமூர்த்தி மனைவி மீனாம்பாள் அவரது

குமாரத்தி தர்மாம்பிகை ஆகியோருக்கு கிரயம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி சொத்தை எனது தாயார் தான செட்டில்மெண்ட் செய்து கொடுத்த 5 ஆண்டுகளுக்கு பிறகுதான் இந்த வழக்கு சொத்தை கிரயம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான்.ஒவ்வொரு ஆண்டும் சொத்தின் மதிப்பு அதிகமாக இருக்கும் என்றால் சரிதான்.

28.07.2011 ஆம் தேதியிட்ட கிரய பத்திரத்தில் ரூ.5,00,000/-த்திற்குதான் விற்றுள்ளேன். **அந்த கிரய ஆவணம் சான்றிட்ட நகல் எ.த.சா.ஆ.3/அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது சகோதரர் சேதுராமன் பாகம் கேட்டு வழக்கு தொடர்ந்த விபரம் ஏற்கனவே தெரியும் என்றால் சரிதான். 28.02.2013 ல் தான் எனதுதரப்பில் வக்காலத்து தாக்கல் செய்யப்பட்டது. **என்னால் 28.02.2013 தாக்கல் செய்யப்பட்ட வக்காலத்து எ.த.சா.ஆ.4/அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனதுதரப்பில் IA No.392/2014 எதிருரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். **அந்த எதிருரை எ.த.சா.ஆ.5/அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மேற்படி அசல் வழக்கில் கடந்த 19.06.2023 அன்று வாதி சாட்சி 1 விசாரிக்கப்பட்டு தொடர்ச்சிக்காக வருகிற 28.06.2023 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். **வழக்கு நாட்குறிப்பின் நகல் எ.த.சா.ஆ.6/ அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

(எதிரிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

**(ஒம்./-திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,**

நீதித்துறை நடுவர், திருவையாறு **)**